## சப்ரகமுவ மாகாணம் சபையின்- 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள் விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் சப்ரகமுவ மாகாண சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சப்ரகமுவ மாகாண சபையின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

#### (அ) மாகாணசபை நிதியக் கணக்கு

மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான கணக்கு 2012 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) ஏனைய கணக்குகள்

சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய கணக்குகளை 2012 யூன் 30 ஆந் திகதி சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2011 ஆம் ஆண்டிற்காக | | |
|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 28 | 28 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 25 | 23 | 02 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 03 | 03 |
| (v) | நிதியக் கணக்குகள் | 03 | 01 | 02 |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 03 | 03 | - |
| | மொத்தம் | 66 | 59 | 07 |

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்/ கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | | வருமானம் | | செலவுகள் | | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | | ரூபா | | ரூபா | | ரூபா | | ரூபா |
| (அ) | கணக்குகளில் அதிகரித்துக் காட்டல் | 01 | 87,458,612 | 01 | 804,182 | 05 | 6,037,913 | 05 | 7,522,533 |
| (ஆ) | கணக்குகளில் குறைத்துக் காட்டல் | - | - | - | - | 01 | 9,358,071 | - | - |
| (இ) | கணக்குகளில் விட்டு விடுதல்கள் | - | - | - | - | 02 | 2,667,427 | - | - |
| | மொத்தம் | 01 | 87,458,612 | 01 | 804,182 | 08 | 18,063,411 | 05 | 7,522,533 |

### 1.3.2 வகைப்படுத்தல் தவறுகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கின் பிரகாரம், காட்டப்பட்டுள்ள ரூபா 1,116,359,799 கூட்டுமொத்தமான இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களினைப் பிரதிநிதித்துதவம் செய்கின்ற குறுங்கால முதலீடு அடிக்குறிப்பு இலக்கம் 14(சீ) இல் திறைசேரி உண்டியல்களின் அடிப்படையிலான முதலீடுகளாகக் காட்டப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வு ஐய வினாக்களிலும் இந்த சமர்ப்பித்தல் தவறு வெளிப்படுத்தப்பட்டிருந்தும் இந்த முதலீடு தொடர்ச்சியாக திறைசேரி உண்டியல்கள் அடிப்படையிலான முதலீடுகளாகக் காட்டப்பட்டு மாகாண சபைக்குச் சொந்தமான பணம் மத்திய அரசாங்கத்தின் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பிழையான கண்ணோட்டத்தினை தோற்றுவிக்கின்றது.

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 27,764,611 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகள் ரூபா 27,641,434 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 1.3.4 வங்கி கணக்கிணக்கம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 08 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் 15 வங்கி கணக்குகள் தொடர்பாக வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் தாமதங்கள் காணப்பட்டன.

(ஆ) வழங்கப்பட்டு 06 மாத காலத்தினைக் கடந்து ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 267,784,382 தொகையான 566 காசோலைகள் தொடர்பாக நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 06 மாதங்களுக்கு மேலாக தேறப்படாத ரூபா 5,120,831 கூட்டு தொகையான வைப்புக்கள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 534,967 கூட்டுமொத்தமான 14 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 28 வங்கி கணக்குகள் தொடர்பாக இனங்காணப்படாத வரவு வைத்தல்கள் ரூபா 3,138,094 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் 25 வங்கி கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் ரூபா 8,512,927 கூட்டுமொத்தமாக இருந்தது.

(ஊ) 03 நிறுவனங்கள் 2011 ஆம் ஆண்டிற்காக எழுதிய ரூபா 1,734,910 கூட்டு மொத்தப் பெறுமதியான 24 காசோலைகள் 2012 சனவரி வரையும் பணம் பெறுவருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்தவேண்டிய கணக்குகள்

01 ஆண்டு காலத்தினை மிகைத்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 405,922 ஆக இருந்தது.

### 1.3.6 கட்டுநிதிக் கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத ரூபா 63,390,918 கூட்டுமொத்தமான கட்டுநிதி வரவு மீதியும் ரூபா 3,372,712 கூட்டுமொத்தமான கட்டுநிதி செலவு மீதியும் காணப்பட்டன.

### 1.3.7 பொது வைப்புக் கணக்குகள்

நிதிப்பிரமாணம் 571 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் காலத்தினை மிகைத்திருந்த பொது வைப்புக்களின் பெறுமதி ரூபா 41,948,428 ஆக இருந்தது.

### 1.3.8 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2011 திசெம்பர் 31 அளவில் 53 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த கணக்காய்வு ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிட முடியாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 105,481,958 ஆக இருந்தது.

#### (ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 936,146 கூட்டுமொத்தமான கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்ததுடன் கல்தொட கால்நடை மருத்துவ அலுவலகத்தில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் 2012 பெப்ரவரி 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைக்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

### 1.3.9 இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 03 ஆம் | 02 நிறுவனங்களின் 09 உத்தியோகத்தர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட 1156 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாலும் அனைத்து தொழிற்பாட்டு அங்கத்தவர்களாலும் வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய உரிய படிவத்திலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்தல் உரிய திகதிக்கு முன்னர் உரிய |

| | | |
|---|---|---|
| | இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 66(4) ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 யூலை 09 ஆந் திகதிய CA/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபம் | சப்ரகமுவ மாகாண சபையின் கௌரவ அமைச்சர்கள் 05 பேர், மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்கள் 30 பேர் மற்றும் 04 உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் போது சீனா மற்றும் தாய்லாந்து சுற்றுப் பயணத்திற்காக ரூபா 7,141,300 தொகையும் 2011 ஆம் ஆண்டின் போது கௌரவ உறுப்பினர்கள் முப்பது பேர் மற்றும் பிரதான செயலாளர் தொடர்பாக கனடா கல்விச் சுற்றுப் பயணத்திற்காக ரூபா 1,432,000 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய உத்தியோகத்தர்களினால் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்று வெளிநாட்டுப் பயணத்தினை அங்கீகரித்த அதிகாரிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) | சனாதிபதியின் செயலாளரின் 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவுகள் முகாமைத்துவ சுற்றுநிருபம் | காணிகள் மற்றும் விவசாயம் தொடர்பான கௌரவ அமைச்சரின் பாவனைக்காக மூன்று வாகனங்களை விடுவிக்க முடியும் என்ற போதிலும் அதற்கு முரணாக 2011 சனவரி 07 ஆந் திகதியிலிருந்து 04 வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2000 யூன் 27 ஆந் திகதிய PF/PE/9 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபம் | மிகை நிதியினை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உரிய அங்கீகாரமின்றி கூட்டுறவு நிதிகளிலிருந்து ரூபா 9,575,000 தொகையும் தீர்ப்பனவு நிதிகளிலிருந்து ரூபா 7,000,000 மில்லியன் தொகையும் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியிலிருந்து ரூபா 4,130,000 தொகையுமாக ரூபா 20,705,000 கூட்டு மொத்ததொகை நிதியத்தின் நிலையான வைப்புக்களில் நீண்ட காலமாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாக அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபம் | நுகரப்பட்ட எரிபொருளின் அளவு தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்க வேண்டிய போதிலும் 04 நிறுவனங்களின் 09 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான பரிசோதனை இடம்பெற்றிருக்கவில்லை என்பது வாகனச் சம்பவக் குறிப்பு புத்தகத்தின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. |
| (ஊ) | 2000 யூன் 20 ஆந் திகதிய 2000/34 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றுநிருபம் | கல்வி அமைச்சின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது பணி ஒப்படைப்பு அடிப்படையில் அல்லது பதில் கடமை அடிப்படையில் உரிய தரத்தினைக் கொண்டிராத ஆசிரியர்கள் அதிபர்கள் பதவிக்கு நியமிக்கப்படக்கூடாது என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்படும் நபர்கள் இலங்கை அதிபர்கள் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளல் பொறுப்பினை அமைச்சு பொறுப்பேற்கக்கூடாது எனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக இலங்கை ஆசிரியர்கள் சேவையின் 54 உத்தியோகத்தர்கள் பதில்கடமை அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். |
| (எ) | கல்வி அமைச்சின் 2008 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 2008/35 ஆம் இலக்க ''பாடசாலைகளை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம்'' என்னும் தலைப்பிலான சுற்றுநிருபத்தின் பந்தி இலக்கம் 11.5 | விலை மனுக்களைக் கோராது பாடசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவரின் தற்றுணிவின் பேரில் ஒரு மாதத்திற்கு வழங்கல் வேலை அல்லது சேவைகளுக்காக செலவு செய்யக்கூடியதாக உச்ச அளவு தொகை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக இரத்தினபுரி மாவட்டத்தின் மத்திய மகாவித்தியாலயம் 2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான 09 மாத காலப்பகுதியின் போது ரூபா 1,121,646 கூட்டுமொத்த தொகையால் இவ் எல்லையை மீறிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2004 யூலை 30 ஆந் திகதிய CA/A2/01/2002 ஆம் இலக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபம் விநியோகிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் அல்லது பின்னைய காலம் தொடர்பாக வைத்தியசாலைகளில் நடாத்தப்பட்டு வரும் உணவுச்சாலைகளின் வருமானத்தினை |

| | |
|---|---|
| | அரசாங்கத்தின் வருமானத்திற்குச் செலவுவைக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் மாவனெல்லை வைத்தியசாலையால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக 2000 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 2,149,200 தொகையும் பாற் சாலையிலிருந்து 2009 யூலை மாதத்திலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 34,000 தொகையான வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. |
| (ஐ) மாகாண சுகாதார அமைச்சு செயலாளரின் 2010 நவம்பர் 04 ஆந் திகதிய HM/E/05/06/01 ஆம் இலக்க கடிதம் | கேகாலை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குரிய சுகாதார உத்தியோக பூர்வ இல்லங்களில் வசிப்பவர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டின் போது உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை ரூபா 234,048 ஆல் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. |
| (ஒ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக்கோவை | |
| I. நி.வி 84, 85 மற்றும் 177 | இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள 03 பாடசாலைகள் பேணிவரும் 03 கணக்குகளுக்குரிய ரூபா 6,595,138 கூட்டுமொத்தத் தொகையான செலவுத்தாள்கள் சிபார்சு செய்யப்படாதும் அங்கீகரிக்கப்படாதும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு பாடசாலை செலவுப் பத்திரங்களை சான்றுபடுத்தாதும் ரூபா 64,943 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| II. நி.வி 261.2.2 | குறித்த செயலுக்கான உப கட்டுநிதியானது குறித்த செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் ஏற்கெனவே பெற்றுக்கொள்ளப்பட்ட உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்படாது உத்தியோகத்தர் ஒருவருக்கு அதனை தீர்த்துவைக்கும் வரை மீண்டும் உப கட்டுநிதிகள் வழங்கப்படலாகாது என்ற போதிலும் 07 நிறுவனங்களினால் அதற்கு முரணாக 112 சநதர்ப்பங்களின் போது ரூபா 4,209,333 கூட்டு மொத்தப் பெறுமதியான |

| | | |
|---|---|---|
| | | முற்பணங்களைத் தீர்த்துவைத்தல் 01 மாதத்திலிருந்து 02 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக தாமதமடைந்திரும் 02 சந்தர்ப்பங்களில் முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் தீர்த்துவைக்கப்படாதிருந்தும் ரூபா 28,600 மற்றும் ரூபா 54,100 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தமையும் 21 சந்தர்ப்பங்களின் போது 11% இலிருந்து 100% வரையான அதிக மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 304,507 கூட்டுமொத்தமான முற்பணங்கள் செலுத்தப்பட்டு அதில் ரூபா 225,306 தொகை 03 நாட்களிலிருந்து 83 நாட்கள் வரை கையில் வைத்திருக்கப்பட்டு தாமதமாகத் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. |
| III. | நிதி விதி 546.1 மற்றும் நிதி விதி 553.1 | பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபையின் 05 நிறுவனங்களில் பிணைப் பணத்தினை வைப்புச் செய்யவேண்டிய 35 உத்தியோகத்தர்கள் உரிய முறையில் பிணைப்பணத்தினை வைப்புச்செய்திருக்க வில்லை. |
| IV. | நிதி விதி 560 மற்றும் 561 | மாகாண சபைக்குச் சொந்தமான அல்லது நிரந்தரமாக மாகாணசபையின் பொறுப்பிலுள்ள அனைத்து சொத்துக்களும் ஏடுகளுக்கு கொண்டுவரப்பட வேண்டியதுடன் முதலீட்டிற்காக II ஆம் அத்தியாயத்தின் (ஊ) பந்தியின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,147,081,963 கூட்டுமொத்த தொகையான 02 நிறுவனங்களில் காணப்பட்ட குறுங்கால முதலீட்டிற்காக முதலீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் 03 நிறுவனங்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஓ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிக் நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| I. | நி.பி 104 | இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மகாவித்தியாலயத்தின் நூல் நிலையப் புத்தகங்கள் தொடர்பாக 2005 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 15,338 பெறுமதியான 177 புத்தகங்களும் பெறுமதி குறிப்பிடப்படாத 277 புத்தகங்களும் காணாமற் போயிருந்ததுடன் அதற்குப் பொறுப்பானவர்களை நிர்ணயித்து நட்டத்தை அறவீடு செய்வது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| II. | நி.பி 138(6) | உறுதிச்சீட்டின் முகப்பில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துதல் போன்றன உறுதிச்சீட்டில் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிச்சீட்டை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் திருப்திகொள்ளப்பட வேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,331,500 கூட்டுமொத்தக் கொடுப்பனவுகளானது விலைப்பட்டியல்கள் அல்லது ஏனைய உறுதிப்படுத்தும் சான்றுகள் இல்லாது இரத்தினபுரி வலயத்தினுள்ள மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமை 2011 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகளைப் பரிசோதனை செய்தபோது வெளிப்படுத்தப்பட்டது. |
| III. | நி.பி 225(1) | அனைத்து கொடுப்பனவுகளுக்குமாக உரிய படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பி தயாரிக்கப்பட்ட உறுதிச்சீட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 14 சற்தர்ப்பங்களின் போது ரூபா 1,491,000 கூட்டுமொத்த தொகை இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட |

| | |
|---|---|
| | கொடுப்பனவுகள் தொடர்பாக உறுதிச்சீட்டை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது 2011 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகளின் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. |
| IV. நி.பி 1645(அ) மற்றும் (ஆ) நி.பி 1646 மற்றும் 1647(உ) | 07 நிறுவனங்களின் 33 வாகனங்களுக்கான ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 77 வாகனங்களுக்கான வாகனப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>---------------------------------------------------------<br>V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு மற்றும் XXXII ஆம் அத்தியாயத்தின் 2.3.2 ஆம் பிரிவு | நிவிதிகல கல்வி வலயத்திலுள்ள மத்திய மாகா வித்தியாலயத்தின் அதிபரின் சேவை முடிவுற்ற காலம் தொடர்பாக சம்பளமாக ரூபா 101,404 செலுத்தப்பட்டிருந்ததுடன் 36 நாட்கள் சம்பளமற்ற விடுமுறை காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 29,101 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 130,505 தொகைப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஃ) தரமான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 22 ஆம் பந்தி மற்றும் கல்வி அமைச்சின் 1982/2 ஆம் இலக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சுற்றுநிருபம் | (அ) கல்விசார் தரமான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான 2002 திசெம்பர் 04 ஆந் திகதிய HRD/PPM/2002/30 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 6.5, 6.6, 7.1 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அனுமதியுடன் வழங்குவது தொடர்பாக தனியான பட்டோலைப் பொருள் பதிவேடும் இருப்பேடுகளும் பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 365,478 தொகைக்கு கொள்வனவு செய்தல் தொடர்பாக இருப்பேடுகளிலோ அல்லது பாவனைப் |

பொருள் பதிவேட்டிலோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள மத்திய மகா வித்தியாலயம் 2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது 16 சந்தர்ப்பங்களில் ரூபா 294,494 கூட்டுமொத்த தொகையான கல்விசார் தரமான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் போதும் இவ் வலயத்திலுள்ள மகா வித்தியாலயம் 2011 ஆம் ஆண்டின் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் ரூபா 237,263 தொகையான கொள்வனவு இடம்பெறும் போதும் பாடசாலை கொள்வனவுக் குழு மற்றும் கொள்வனவுக் குழு என்பவற்றைச் செயற்படுத்தாது அதிபரின் தற்றுணிவின் பேரில் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் இடம்பெற்றுள்ளன.

(க) ஓய்வூதியத் திணைக்களத்தின் 1990 யூலை 28 ஆந் திகதிய 4/90 ஆம் இலக்க சுற்றுநிருபம்

கேகாலை பிரதி சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் 12 இளம் வயதினர் தொடர்பாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 255,840 தொகை கணக்காய்வு திகதியான 2012 சனவரி வரையும் வைப்பாளர்களின் வயது 21 இலிருந்து 46 வரை அடையப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை உரிமையாளர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 1,056,423,606 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை பா 448,266,250 ஆக இருந்தது.

## 2.1 வருமானம் மற்றும் செலவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

**வருமானம்**

| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | 2011 பாதீடு செய்யப் பட்டவை | 2011 உள்ளபடி யானவை | 2011 முரண் | 2010 பாதீடு செய்யப் பட்டவை | 2010 உள்ளபடி யானவை | 2010 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 1,509,252,000 | 1,943,637,444 | 434,385,444 | 1,560,660,000 | 1,381,762,380 | 178,897,620 |
| வரியற்ற வருமானம் | 314,748,000 | 416,079,145 | 101,331,145 | 279,340,000 | 359,662,986 | 80,322,986 |
| அரசாங்க மானியம் | 13,217,723,417 | 11,694,547,000 | 1,523,176,416 | 12,446,225,900 | 10,559,240,000 | 1,866,985,900 |
| விசேட செயற்திட்டம் | மதிப்பிடப் படவில்லை | 350,198,376 | - | மதிப்பிடப் படவில்லை | 498,120,909 | - |
| ஏனையவை (விசேட உதவி) | மதிப்பிடப் படவில்லை | 51,705,401 | - | மதிப்பிடப் படவில்லை | 327,411,806 | - |
| | 15,041,723,417 | 14,456,167,366 | 2,058,893,005 | 14,286,225,900 | 13,126,198,081 | 2,146,206,506 |

**செலவுகள்**

| மீண்டுவரும் செலவுகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆளணி ஊதிபம் | 9,883,677,714 | 9,737,880,378 | 145,797,336 | 9,560,771,893 | 8,691,855,501 | 868,916,392 |
| ஏனையவை | 2,316,060,301 | 1,949,305,290 | 366,755,011 | 2,007,824,107 | 1,655,498,969 | 352,325,138 |
| உபமொத்தம் | 12,199,738,015 | 11,687,185,668 | 512,552,347 | 11,568,596,000 | 10,347,354,470 | 1,221,241,530 |
| மூலதனச் செலவுகள் | 2,841,985,402 | 1,712,558,092 | 1,129,427,310 | 2,717,629,900 | 2,330,577,362 | 387,052,538 |
| முழு மொத்தம் | 15,041,723,417 | 13,399,743,760 | 1,641,979,657 | 14,286,255,900 | 12,677,931,832 | 1,608,294,068 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவு ரூபா 13,399,743,760 ஆக இருந்தது. இதில் 87.2% மீண்டுவரும் செலவுகளாக இருந்ததுடன் 12.8% மூலதனச் செலவுகளாகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

(அ) கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட கடந்த 03 ஆண்டுகளில் அந்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலுள்ளவாறான நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 69,113,705 | 48,142,200 | 134,824,668 |
| வரியல்லாத வருமானம் | 1,524,855 | 8,134,043 | 8,408,951 |
| | 70,638,560 | 56,276,243 | 143,233,619 |

(ஆ) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை 21 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 35,632,894 கூட்டுமொத்தமான நீதிமன்றத் தண்டப்பணங்கள் உள்ளூராட்சி அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கேகாலை மாவட்டத்திலுள்ள 02 பிரதேச செயலகங்களினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,313,480 தொகையான குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்காததுடன் அறனாயக்க பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்ட மூன்று சிறிய நீர் மின் செயற்திட்டங்களிலிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,537,625 தொகையான வருடாந்த குத்தகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் மேலும் 04 செயற்திட்டங்களிலிருந்து எதுவித குத்தகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தெரனியகல பிரதேச செயலாளர் பிரிவில் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டு வரும் பொல்கஸ்வத்த நீர் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள 0.9048 ஹெக்டயர் பரப்பளவினைக் கொண்ட

330/331 ஆம் இலக்க காணித்துண்டு தொடர்பாக 2010 பெப்ரவரி முதல் 2012 பெப்ரவரி வரையான நீண்டகால குத்தகை பெற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக அக்காணி தொடர்பாக மாகாண சபையால் அறவிடப்பட வேண்டிய வருடாந்த குத்தகைப் பணம் இழக்கப்பட்டிருந்தது.

## 2.3 அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை மிகைத்து செலவு செய்தல்

இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 69 இலுள்ள அறிவுறுத்தல்களுக்கும் சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதி 33 இல் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் முரணாக உரிய அதிகாரமின்றி 08 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் நிகழ்ச்சித்திட்டம், செயற்திட்டம், செலவு விடயங்கள் (1001-1003-தனியாள் ஊதியங்களைத் தவிர்த்து) என்பவற்றில் மாகாண சபையால் அறிவுறுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 46,843,629 தொகையான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.4 முற்பணக் கணக்கு எல்லைகளைப் பின்பற்றாமை

இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 503 மற்றும் மாகாண சபை நிதி விதி 367 இலுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக 02 முற்பணக் கணக்கு விடயங்கள் செலவுகளின் உச்ச எல்லையை ரூபா 313,870 இனாலும் 01 செலவு விடயத்தின் வரவு மீதியின் உச்ச எல்லையை ரூபா 581,705 இனாலும் மிகைத்திருந்ததுடன் 02 செலவு விடயங்களின் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 3,202,504 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.5 தொழிற்பாட்டு நட்டம்

ஒரு வணிக முற்பணக் கணக்கு கடந்த 03 ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக தொழிற்பாட்டு நட்டத்தினை அறிவித்திருந்தது. நிதிப்பிரமாணம் 513 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கூறிய தொழிற்பாட்டு நட்டத்தினை உள்ளடக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முற்பணக் கணக்குகளை நட்டத்தில் பேணுவதின் பொருளாதார மற்றும் சமூக நியாயத்தன்மை தொடர்பாக முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) மாகாண சபை அமைச்சு, திணைக்களம், நிறுவனம் என்பன**

| | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவிநிலை | 1127 | 1,075 |
| உதவியாளர் | 5259 | 4488 |
| சிற்றூழியர் | 3278 | 2442 |
| ஏனையவை (அமையம், தற்காலிகம்) | 34 | 365 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| அதிபர்கள் | 1127 | 730 |
| ஆசிரியர்கள் | 19216 | 18545 |
| சிற்றூழியர்கள் | 859 | 208 |
| ஏனையவர்கள் (அமையம்) | 230 | 100 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய தேசிய ஆசிரியர்கள் கொள்கைகளின் பிரகாரம் மிகவும் வசதியான பாடசாலைகளில் சேவையாற்றக்கூடிய உச்ச அளவான காலம் 06 ஆண்டுகளுக்கும் வசதியான பாடசாலைகளில் சேவையாற்றக்கூடிய உச்ச அளவு காலம் 08 ஆண்டுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தும் மாவனல்லை மற்றும் பலாங்கொடை வலயத்திலுள்ள 129 பாடசாலைகளின் 923 ஆசிரியர்கள்

14 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகள் வரையான காலம் சேவையாற்றிவந்தமை அவதானிக்கப்பட்டது.

II. முகாமைத்துவ சேவை மற்றும் அலுவலகப் பதவியணியின் 15 உத்தியோகத்தர்களை 10 ஆண்டுகளிலிருந்து 18 ஆண்டுகள் வரையான காலம் இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தெஹியோவிட்ட வலயக் கல்வி அலுவலகத்திலேயே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

III. நிவிதிகல கல்வி வலயத்திலுள்ள தமிழ் வித்தியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினரை ஒப்பீடு செய்த போது 24 ஆசிரியர்களின் பற்றாக்குறையும் 05 ஆசிரியர்களின் மிகையும் காணப்பட்டதுடன் அதிபரால் 2010 ஆகஸ்ட் 06 மற்றும் 2010 செப்தெம்பர் 24 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் முதலமைச்சுச் செயலாளர் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தும் தேவையான சமப்படுத்தல் செய்தல் 2011 நவம்பர் மாதம் வரை இடம்பெற்றிருக்கவில்லை. பாடசாலையின் மொத்த ஆசிரியர் தேவைப்பாட்டில் அதாவது 62 ஆசிரியர்களில் 24 ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுதல் அதாவது 39% ஆன ஆசிரியர் பற்றாக்குறை வித்தியாலயத்தின் மாணவ மாணவிகளின் கல்வித் தரம் தொடர்பாக பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட்டது.

IV. சப்ரகமுவ மாகாண ஆசிரியர் சேவையில் மற்றும் அதிபர் சேவையின் இடமாற்ற நடைமுறையின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் எக்காரணத்திற்காகவும் எப்பாடசாலையினதும் மிகையான ஆசிரியர்களை அதிபர்களை விடுவிக்காது நிறுத்திவைத்திருந்தால் அவ் ஆசிரியர்களுக்கு/ அதிபர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளம் உரிய அதிகாரிகளுக்கு மிகைக் கட்டணமிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக பலாங்கொடை வலயத்திலுள்ள 04 பாடசாலைகளின் 07 ஆசிரியர்களுக்கு எதுவித பணியும் ஒப்படைக்கப்படாது அவர்கள் விளைவற்று இருந்ததுடன் அவ் ஆசிரியர்களுக்கு 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,985,460 கூட்டு மொத்த தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.7.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளவாறு பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை/ வகையின் அளவு | பெறுமதி (ரூபா) | பயன்படுத்தப்படாது காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| (அ) | கட்டிடம் | 05 | கணிக்கமுடியவில்லை | - |
| (ஆ) | வாகனம் | 01 | - மேற்படி - | 03 ஆண்டுகள் |
| (இ) | இயந்திரம் | 07 | - மேற்படி - | 08 மாதங்களிலிருந்து 06 ஆண்டுகள் வரை |
| (ஈ) | அலுவலக உபகரணம் | 06 | 45,954 | 09 மாதங்கள் |
| (உ) | ஏனையவை | 43 | 12,462,321 | 03 மாதங்களிலிருந்து 03 ஆண்டுகள் வரை |

சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விசேட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

பலாங்கொடை வலயக் கல்வி அலுவலகத்தில் பாதுகாப்பின்றி வைத்துள்ள புகைப்படப் பிரதி இயந்திரத்தின் வயர் பாதிப்படைந்ததன் காரணமாக திருத்தம் செய்வதற்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 171,360 தொகையான மதிப்பீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் தேவையான நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ளமுடியாமையின் அடிப்படையில் திருத்த வேலைகள் 2012 மே 23 ஆந் திகதி வரையும் இடம் பெற்றிருக்காததுடன் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 மே 23 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

**2.7.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்**

(அ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 19 மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வினை நடாத்தாதிருந்ததுடன் கேகாலை மாவட்ட சுகாதார சேவை கல்வி அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற 23 நிறுவனங்கள் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கையினை 2005 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளாதிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிற்காக 18 நிறுவனங்களும் 2011 ஆம் ஆண்டிற்காக 38 நிறுவனங்களும் பொருள் மெய்மையாய்வினை நடாத்தியிருக்கவில்லை. மேலும் 05 நிறுவனங்கள் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலாங்கொடை வலயக் கல்வி அலுவலகத்தில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2012 மே 23 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் வலயத்திலுள்ள 136 பாடசாலைகளுக்கு மத்தியில் 45 பாடசாலைகள் ஒரு பொருள் மெய்மையாய்வினையோ நடாத்துவதற்கு 2012 மே 23 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.7.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்**

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,512,067 ஆக இருந்தது.

**2.7.4 தீர்த்துவைக்கப்படாத முற்பணங்கள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 90,776,931 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்தினை மிகைத்த மீதிகள் ரூபா 35,290,396 ஆக இருந்தது.

### 2.7.5 அறவிட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியுள்ள பதவியினர் கடன் முற்பணங்களின் மீதிகள் ரூபா 151,229,645 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேலாக அறவீடு நிலுவையாக இருந்த கணக்கு மீதிகள் ரூபா 55,448,709 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2.8 வாகனப் பயன்பாடு

கேகாலை பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் காணப்பட்ட சிறிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளவை என சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு 2011 ஒக்டோபர் 13 ஆந் திகதி அறிக்கையிடப்பட்ட ஓடும் நிலையில் காணப்பட்ட 31 சிறீ 2644 ஆம் இலக்க வாகனத்தை பாவனையிலிருந்து நீக்கி 2011 ஒக்டோபர் 14 ஆந் திகதி உடைந்த வாகனமாகப் பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2011 ஒக்டோபர் மாதம் சுகாதார அமைச்சிடமிருந்து கிடைத்த LW-0129 மற்றும் WPC 2010/2011 ஆகிய இலக்கமுடைய புதிய இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் 2012 சனவரி அளவில் ஓடுவதற்காகப் பயன்படுத்தப்படாது அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

### 2.9 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போதும் நிறுவனத்தில் காணப்பட்ட தகவல்களின் பிரகாரமும் மீளாய்வாண்டின் ரூபா 5,268,641 கூட்டுமொத்தமான நட்டங்களும் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டன.

(ஆ) 2010 கமநெகும II ஆம் கட்டத்தின் கீழ் இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள மத்திய மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கை வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் போது கொள்வனவு நடைமுறைகளைக் கவனத்தில் கொள்ளாது அதிபர் தனது தற்றுணிவின் பேரில் நிர்மாணப் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்திருந்ததன் காரணமாக கஹவத்த பிரதேச செயலகத்திலிருந்து கிடைத்த ரூபா 350,950 பணத்தினை மிகைத்து ரூபா

510,236 செலவு செய்ததன் காரணமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் பாடசாலையினைக் கட்டியெழுப்புதல் கணக்கிற்கும் ரூபா 159,286 தொகையான ஒப்பந்த நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) சப்ரகமுவ மாகாண சபையின் வீதி அமைச்சினால் 2007 ஆம் ஆண்டில் 07 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக்காரருக்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,812,643 தொகை உரிய காலத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கிப் பிணைகளின் காலம் கடப்பதற்கு முன்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக மேற்கூறிய தொகை மாகாணசபை நிதியத்திற்கு நட்டமடைந்திருந்தது.

(ஈ) மாவனல்ல ஆதாரவைத்தியசாலையின் 2011 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் களஞ்சியம், மருந்துக் களஞ்சியம், ஆய்வுகூடம், பொதுக்களஞ்சியம் ஆகிய பிரிவுகளிலுள்ள பொருட்கள் மற்றும் மருந்துகள் முதலியவற்றிற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ரூபா 296,712 ஆக இருந்ததுடன் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 வெளிப்படையான மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள ஒரு மகாவித்தியாலயத்தில் புத்த சிலையை நிர்மாணிக்கும் பணி 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2011 ஒக்டோபர் 20 ஆந் திகதி வரையும் பூர்த்திசெய்யப்படாத இவ் வேலையின் பாதீடு பற்றி விசாரித்த போது அதிபதினால் பெற்றோர் குழுவின் மூலம் தேவையான பணம் மற்றும் பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டதாகக் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அனைத்துப் பணமும் பொருட்களும் அதிபரால் பெற்றுக்கொள்ளப்பட்டு செலவு செய்யப்பட்டதாக சுய விருப்பின் பேரில் கணக்காய்விற்குச் சாட்சிகளை வழங்கிய ஆசிரியர்களிடமிருந்தும் 16 குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெற்றோர்களிடமிருந்து மாத்திரம் ரூபா 47,000 தொகை பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாது அதிபரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதனாலும் நியாயமாக சேகரிக்கப்பட வேண்டிய

பெறுமதிக்குச் சமனான வேலைப்பெறுமதி நிறைவேற்றப்படவில்லை என்பதனாலும் இப் பணம் அதிபரினால் தனிப்பட்ட பாவனைக்கு ஈடுபடுத்தப்படவில்லை என்பதனை கணக்காய்வில் திருத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள மகா வித்தியாலயத்தின் அதிபரால் ரூபா 306,988 கூட்டு மொத்தமான போலிப் பட்டியல்களும் கேட்பு மனுக்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டதாகக் காண்பிக்கும் போலி உறுதிப்படுத்தல் ஆவணங்களை கோவை பண்ணப்பட்டு ரூபா 259,002 கூட்டு மொத்தமான கொள்வனவுகள் இடம்பெற்றுள்ளதாகக் காண்பித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கிலிருந்து கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் உறுதிப்படுத்தல் சான்றுகளின் பிரகாரம் இப்போலிக் கேட்பு மனுக்களில் காட்டப்பட்டுள்ள நிறுவனம் உள்ளபடியாகக் காணப்படவில்லை எனவும் ரூபா 100,213 தொகையான கொடுப்பனவுகளைச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினால் அவ்வாறான விலைப்பட்டியல் வழங்கப்படவில்லை எனவும் அந்த வேலைகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் அப் பெறுமதிக்குரிய காசோலைகள் அல்லது பணம் பொறுப்பேற்கப்படவில்லை எனவும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 போதியளவில் நிறைவேற்றப்படாத குறிக்கோள்கள்

காளாண் செய்கைக்காக 50% மானிய அடிப்படையில் பலாங்கொடை தஹமான ஆலோசனை அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட 314 சதுர மீற்றர் விவசாய தடுப்பு விலை 260 ஆகிய 83% விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 54 சதுர மீற்றராகிய 17% ஆனவை விவசாயிகளுக்கு வழங்கப்படாது அலுவலகத்தில் வைத்திருக்கப்பட்டன. மேலும் பகிர்ந்தளிக்கப்பட்ட வலைகளில் 172.5 சதுர மீற்றராகிய 66% ஆனவை பௌதீக தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 88% ஆனவை அதாவது 152.5 சதுர மீற்றர் பயன்படுத்தப்படாது விவசாயிகளிடம் காணப்பட்டதுடன் 12% அளவான 20 சதுர மீற்றர் மாத்திரம் உரிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேற்

கூறியவாறு விவசாய உபகரணங்களைப் பகிர்ந்தளிப்பதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற பின்தொடர் நடவடிக்கை போதியதாக இல்லாதனால் மேற்கூறியவாறு செயற்திட்டங்கள் வெற்றியளிக்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.12 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 25 வளப்பகிர்வாளர்கள் தொடர்பான பதிவேட்டில் வருகை மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்தும் 171 மணித்தியாலங்களுக்காக ரூபா 61,750 தொகையும் கற்கை நெறிக்காக எந்த மாணவர்களும் பங்கு பற்றாது 10 வளப்பகிர்வாளர்கள் 86 மணித்தியாலங்களுக்காக ரூபா 26,900 தொகையும் ஒரு நாளைக்கு விரிவுரை நடாத்த வேண்டிய உச்ச அளவு நேரம் 07 மணித்தியாலங்களை மிகைத்து 16 வளப்பகிர்வாளர்களுக்காக 240 மணித்தியாலங்களுக்கு ரூபா 96,500 தொகையும் ஆக முறையான மேற்பார்வையின்றி செலுத்தப்பட்டிருந்தன என்பது பனாவல நடனப் பயிற்சி நிலையத்தின் ஆய்வின் போது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மஹவில ஹககொட விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 2010 திசெம்பர் 17 ஆந் திகதி ரூபா 765,687 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 06 ஆந் திகதிய கணக்காய்வில் அவ் வேலையினை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது ரூபா 154,692 தொகை செலுத்தப்பட்டிருந்த 06 விடயங்களின் கீழ் செய்யப்பட வேண்டிய வேலைகள் உரிய நிலையத்தின் படி செய்யப்படவில்லை எனவும் நிர்மாணிக்கப்பட்ட வாயில் கதவுக்கு வர்ணம் பூசப்படாமையில் அது துருப்பிடிக்கும் ஆபத்திற்கு உள்ளாகியிருந்தமையும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒரு ஆண்டு கடந்திருந்தும் அதன் காணி உரிய முறையில் தயார்படுத்தப்படாததன் காரணமாக புதர் வளர்ந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் மோசடியான அறிக்கையின் அடிப்படையில் 2011 மே 04 ஆந் திகதி ரூபா 86,032 தொகையான பிடித்து வைத்தல் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் இவ் வேலை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் விளையாட்டு

மைதானத்தினைச் சுற்றி இடப்பட்ட வேண்டிய வலை மறைப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கேகாலை வலயக் கல்வி அலுவலக வளவில் அமைந்துள்ள உணவுச் சாலை கேள்வி நடைமுறைகளுக்கு முரணாகவும் வாடகையாளருடன் உடன்படிக்கை செய்து கொள்ளாமலும் பல ஆண்டுகளாக நடாத்தப்பட்டு வந்துள்ளதுடன் வாடகைப் பணத்தினை தீர்மானிக்கும் போதும் வெளிப்படைத்தன்மையின்றி இடம் பெற்றிருந்தது. மேலும், உணவுச் சாலை வாடகையாக 2004 ஆம் ஆண்டிலிருந்து 2010 திசெம்பர் 31 வரை 30 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 90,600 தொகைப் பணம் அரசாங்கத்தின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கேகாலை சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள உணவுச் சாலை கேள்வி கோரப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது குத்தகை வாடகையாகக் கிடைத்திருந்த ரூபா 64,350 தொகைப் பணம் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதனை ஊழியர் நலன்புரி நிதியம் என்ற பெயருள்ள கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(உ) மாவனெல்ல ஆதார வைத்திய சாலையில் அசுத்த ஆடைகளை கழுவுவதற்காக 2011 ஆம் ஆண்டிற்கு பகிரங்க கேள்வி கோரப்படாது 2010 ஆம் ஆண்டிற்கான பிணை வைப்பாளர்களுக்கு மத்தியில் கேள்விதாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவ் ஆண்டில் பிணை வைப்பாளர்களைத் தெரிவு செய்யும் போது மாதிரிகள் முறையாக இனங்காணப்படாததன் காரணமாக அதிக விலையின் கீழ் கேள்விதாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனால் 2011 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டிற்காக வைத்தியசாலை வாட்டுக்களுக்காக ரூபா 34,922 தொகையும் சத்திர சிகிச்சை கூட்டத்திற்காக ரூபா 249,142 தொகையும் மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ஊ) 1992 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையும் உத்தியோகபூர்வமற்ற அமைப்பாக அம்பிலிபிடிய ஆதார வைத்தியசாலையில் நடாத்தப்பட்டு வருகின்ற நலன்புரி சங்க நிதியத்தின்

2010 ஆம் ஆண்டின் போது நாளாந்த பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் இறுதி மிகுதியாக உள்ள கையில் உள்ள காசு மற்றும் வங்கி மீதியினையும் செம்மையாக்கித் தயாரிக்கப்பட்ட நாளாந்த பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் பிரகாரம் ரூபா 224,777 தொகையான பணக் குறைவு அவதானிக்கப்பட்டது.

**2.13 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் ரூபா 100,000 நிதி ஏற்பாட்டினையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதிகளையும் பயன்படுத்தி கஹவத்தை தமிழ் மஹா வித்தியாலயத்தில் வாசிக சாலைக்காக ரூபா 101,877 தொகையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2011 யூன் 03 ஆந் திகதி இருப்பு ஏடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2011 நவம்பர் 15 ஆந் திகதியளவில் பாடசாலையின் வகுப்பறைகள் போதியளவில் இல்லாததன் காரணமாக வாசிகசாலைக்காக குறிப்பாக இடம் ஒதுக்கப்பட்டிருக்காததுடன் உரிய உபகரணம் பாடசாலையின் வகுப்பறைகள் பலவற்றினுள் வைக்கப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பலாங்கொடை பொறியியளாளர் அலுவலகத்தினால் 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதியளவில் தார் இருப்பேடு சம்பந்தப்பட்டிருக்காததுடன் இறுதியாகச் சமப்படுத்தப்பட்ட 2011 யூலை 12 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி 180 லீற்றர் தார் பீப்பாக்கள் 48 ஆக இருந்தன. அத் திகதியின் பின்னர் 3 சந்தர்ப்பங்களின் போது 15 தார் பீப்பாக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க புத்தகங்களின் மீதி 33 பீப்பாக்களாக இருந்த போதிலும் மேற்கூறிய திகதியில் மேற் கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 180 லீற்றர் பீப்பாக்கள் 51 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க பதிவேட்டில் உள்ளடக்கப்படாத 18 தார் பீப்பாக்களின் மிகைகள் அவதானிக்கப்பட்டதுடன் பௌதீக பரிசோதனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 51 தார் பீப்பாக்களில் 10 தார் பீப்பாக்கள் தொழிநுட்ப உத்தியோகத்தர் வசிக்கும் உத்தியோக பூர்வ இல்லத்தினுள்ளும் 03 பீப்பாக்கள் பூட்டு போடப்பட்டு மூடப்பட்டுள்ள அறையினுள்ளும் வைத்திருக்கப்பட்டதன் காரணமாக தாரைப் பயன்படுத்துதல் தொடர்பாக உரிய கவனத்தோடு

உள்ளகக் கட்டுப்பாடு நடைமுறைகள் நிறுவனத்தில் தோற்றுவிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) இரத்தினபுரி கல்வி வலயத்திலுள்ள மத்திய மகா வித்தியாலயத்தினால் 2011 சனவரியிலிருந்து பாடசாலை நடைபெறும் நாள் ஒன்றிற்கு ரூபா 1300 படியான குத்தகைக்கு இரண்டு ஆண்டுகளுக்காக பாடசாலையின் உணவுச் சாலை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தும் 2011 நவம்பர் 23 ஆந் திகதி (கணக்காய்வுத் திகதி) வரையும் வாடகை வருமானமாகக் கிடைக்க வேண்டிய ரூபா 173,620 கூட்டு மொத்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவனெல்லை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைக்கு தர உள்ளீடு தொடர்பாக 2008,2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 240,991 தொகை 2011 திசெம்பர் மாதம் வரை செலவு செய்யப்படாது எஞ்சியிருந்தது.

(உ) 2012 சனவரி அளவில் கேகாலை கல்வி வலயத்திற்குச் சொந்தமான மூடப்பட்ட 31 பாடசாலைகள் மத்தியில் 06 பாடசாலைகள் மூடப்பட்டு 10 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் உரிய ஆதனத்தினை பிரதேச செயலாளருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 1999 ஆம் ஆண்டின் போது மூடப்பட்டிருந்த கே/தியகம கனிஷ்ட வித்தியாலயத்தின் கட்டிடம் மற்றும் காணியைத் தீர்த்து வைப்பதற்கு 2012 ஆம் ஆண்டு வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கேகாலை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தின் கீழ் செயற்படுகின்ற 06 கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்களுக்குரிய கட்டிடங்கள் மற்றும் காணிகளை இனங்கண்டு உரிமைகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் உப பிரிவின் பிரகாரம் வழமையான கடமைகளை மேற்கொள்ளும் போது மேலதிகமாக பிரயாணம் மேற்கொள்ள வேண்டியுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக போதியளவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக குறிப்பான படி ஒன்றினை செலுத்துவதற்கு திணைக்களத்தின் தலைவருக்கு முடியுமாக இருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக

மக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மேற்கூறிய திரண்ட படியாக ரூபா 175,093 செலுத்தப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளின் மூலம் உள்ளடங்கப்படுகின்ற நாணாவித விடயத்துறைகளுக்குரிய பரிசோதனைகளுக்கு உட்பட்ட அனைத்து மாதங்களுக்காக தொடர்ச்சியான மேற்பார்வை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சில அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) சப்ரகமுவ நூலக சேவையினை முறையாகப் பேணுதல், வாசகர்களின் தேவைகளை நிறைவேற்றுதல், மேலும் விசேடமான குறிக்கோள்கள் பலவற்றைக் கவனத்தில் கொண்டு நூலகச் சேவைச் சபையைத் தோற்றுவிப்பதற்காக சப்ரகமுவ மாகாணத்திற்குள் 24 உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் ரூபா 50,000 படியாக ரூபா 1,200,000 கூட்டு மொத்த தொகை 2010 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் இந்த நூல் நிலையச் சேவை சபையைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் அந்த வைப்பு விளைவற்றுக் காணப்பட்டது.

(ஏ) 2008 மே 14 ஆந் திகதியிலிருந்து 2010 மார்ச் வரையான காலத்தின் போது பதிவு செய்யப்பட்டுள்ள 24 காணி உறுதிகள் உரிய உத்தரவுப் பத்திரதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது எஹலியகொட பிரதேச செயலகத்தில் வைத்திருக்கப்பட்டதுடன் காணிகள் 23 ரன்பிம உறுதிகளுக்குரிய உத்தரப்பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக கொடகாவெல பிரதேச செயலகத்தில் வைத்திருக்கப்பட்டது.

(ஐ) 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரை 38 சந்தர்ப்பங்களில் 391,924 மருந்துகள் தரமற்றவை என இனங்காணப்பட்டதன் பின்னர் பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீண்டும் மருந்துகளை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் இனங்காணப்படாதிருந்ததுடன் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையும் 11 வகையான பொருட்கள் மற்றும் மருந்துகளுக்குரிய 60,804 மருந்து அலகுகள் காலாவதியானதன் காரணமாக பாவனையிலிருந்து ஒதுக்கி

வைக்கப்பட்டிருந்ததுடன் காலாவதியாவதற்கு முன்னர் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இறக்குவானை டிப்டின் தோட்டத்தில் மலசல கூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களில் வழங்கப்பட்ட ரூபா 750,000 தொகையினை உரிய நலன் பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படாமையினாலும் நலன் பெறுனநர்களின் கையொப்பங்களில் முரண்பாடு காணப்பட்டதனாலும் உதவிப் பணம் பகிர்ந்தளிப்பது தொடர்பாக கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(ஓ) 2011 ஆம் ஆண்டின் போது பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சயரோகத்திற்கு பரிகாரம் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் டெங்கு நோய்க்கு பரிகாரம் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 690,500 கிடைத்திருந்ததுடன் அந் நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையால் ரூபா 313,473 தொகை திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஔ) சப்ரகமுவ மாகாண சபைக்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை தந்திரோபாயத் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக 2011 திசெம்பர் மாதம் வரை தலைமைச் செயலகம் மற்றும் பிரதி பிரதம செயலாளர், திட்டமிடல் பதவியால் ரூபா 2,274,237 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் வரைபு தந்திரோபாயத் திட்டமானது 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதி மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரை அதனை அங்கீகரித்து அதன் நலன்களை மாகாண சபைக்குப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.14 செயலாற்றல்

### 2.14.1 அரசாங்க மானியம்

மாகாண சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளும் செலவு செய்தல்களும் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | மூலம் | நிதிஏற்பாடு | செலவுகள் | குறைவாகப் பயன்படுத்தல்/ மிகையாகப் பயன்படுத்தல் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| I. | பருமனளவு மானியம் | 284,580,000 | 321,413,062 | (36,833,062) |
| II. | மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியம் | 1,075,250,000 | 1,087,048,864 | (11,798,864) |
| III. | விசேட செயற்திட்டம் | 350,198,376 | 193,870,823 | 156,327,553 |
| IV. | உலக வங்கி | 51,705,401 | 110,225,343 | (58,519,942) |

### 2.14.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலை மற்றும் தொடர்ச்சியான வேலையின் கீழ் ரூபா 2,050,659,995 தொகையான 4688 வேலைப் பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைப் பிரேரணைகளின் செயல்முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டவை | 2253 | 1132 | 3385 |
| (ஆ) | 50% இனை விட குறைவாகப் பூர்த்திசெய்யப்பட்டவை | 348 | 13 | 361 |
| (இ) | 50% இனை விட மிகையாக பூர்த்தி செய்யப்பட்டவை | 793 | 116 | 909 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாதவை | 27 | 6 | 33 |
| (உ) | சச்சரவுத்தன்மையானவை/ சிக்கலான நிலையின் கீழுள்ளவை | - | - | - |
| | மொத்தம் | 3421 | 1267 | 4688 |

## 2.15 ஒப்பந்த நிர்வாகம்

### 2.15.1 செயற்திட்டங்கள்/ திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம்

பின்வரும் செயற்திட்டங்கள்/ திட்டங்களை அமுல்படுத்துவதில் நீண்டகால தாமதங்கள் காணப்பட்டன.

| | செயற்திட்டம்/ திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதி | 2011 திசெம்பர் 31 வரையும் மேற்கொள்ளப்பட்ட செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | |
| (அ) | இர/எம்/மாதம்பை இலக்கம் 01 தமிழ் வித்தியாலயம் மலசலகூட செயற்திட்டம் | 118,388 | 2011.09.29 | 2012.01.27 | - | பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தாமதம் |
| (ஆ) | இர/எம்/இரத்னாலோக மகாவித்தியாலயம் - கூரையினைத் திருத்தம் செய்தல் | 725,238 | 2011.10.20 | 2012.01.20 | - | மதிப்பீட்டிலுள்ள தவறின் காரணமாக வேலையை நிறுத்துவதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | இர/அம்/பதலங்கல வித்தியாலயம் - வடிகால் முறைமையினைத் திருத்தம் செய்தல் | 1,049,896 | 2011.11.09 | 2012.02.09 | - | உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) வாய்மொழி மூலம் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் |
| (ஈ) | படதொட பாலத்தினை நிர்மாணித்தல் | 13,025,000 | 2010.01.15 | 2011.12.31 | 7,299,923 | திட்டத்தின் தவறு காரணமாக |
| (உ) | தெல்கொட எலவெல்ல பாலம் நிர்மாணம் | 14,000,000 | 2009.12.18 | - | 12,154,741 | அதிக மழை |

- மாகாண பருமனளவான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு ரூபா 706,000 தொகையில் ஆண்டின் இறுதியில் வேலையினைப் பூர்த்திசெய்த 08 வேலைகளுக்குரிய ரூபா 608,066 கூட்டுமொத்த தொகையான வேலைக்கான கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாக தொடர்ந்திருந்தது.

## 2.15.2 முழுமையாகக் கைவிடப்பட்ட செயற்திட்டம்/ திட்டம்

பின்வரும் செயற்திட்டங்கள் திட்டங்கள்/ திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம்/ திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் |
|---|---|---|
| | | ரூபா |
| (அ) | இர/பாதகட தமிழ் மகா வித்தியாயலயத்தில் 03 மலசல கூடங்களையும் 02 மலசல கூடங்களையும் நிர்மாணித்தல் | 865,000 |
| (ஆ) | இர/பலா/வல்பொட தமிழ் வித்தியாலயம் - 02 மலசல கூடங்களை ஒரு மலசல கூடத்தினையும் நிர்மாணித்தல் | 237,498 |
| (இ) | இர/நிவி/கெடகல வித்தியாலயம் - 60’x20’ அளவுள்ள கூரையைத் திருத்தம் செய்தல் | 805,841 |
| (ஈ) | கே/தெஹி/மியனவிட வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டிடத்தினை திருத்தம் செய்தல் | 1,470,000 |

| | | |
|---|---|---|
| (உ) | இர/பலா/மஹாவலதென்ன வித்தியாலயத்தில் நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் | 203,412 |
| (ஊ) | இர/பலா/மஹவலதென்ன வித்தியாலயத்தில் எல்லைப் பகுதிக்கு கம்பி வலை மற்றும் வாயில் கதவை நிர்மாணித்தல் | 738,214 |
| (எ) | இர/பலா/மஹவலதென்ன வித்தியாலயத்தில் பாதுகாப்புச் சுவரை நிர்மாணித்தல் | 933,393 |

### 2.15.3 நிர்மாணங்கள்

நிர்மாண நடவடிக்கை தொடர்பான வெளிக்களப் பரிசோதனையின் போது காணப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

(அ) மொரஹல அமுபிடிய வீதியில் 2.00-5.26 கிலோ மீற்றர் வரை மேம்படுத்தும் வேலைக்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 7,265,000 பெறுமதியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் கேள்வி கோரப்பட்டதன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகள் பலவீனமாக இருந்ததனால் 2010 திசெம்பர் 17 ஆந் திகதி உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டு நேரடி உழைப்பு அடிப்படையில் நிர்மாணங்களை மேற்கொள்ளல் மாகாண வீதி அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நேரடி வேலையாள் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் நிர்மாணத்தினை 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்திசெய்யுமாறு பணிப்பாளரினால் (வீதி) தெரிவிக்கப்பட்டிருந்த அதேவேளை 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இவ் வேலைக்காக கொள்வனவு செய்யப்பட்ட நிர்மாணப் பொருட்களில் 2011 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை ரூபா 81,768 தொகையான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கவரன்ஹேன சுகாதார நிலையத்தினை திருத்தம் செய்வதற்காக 2 ½ மாத காலத்திற்கு 2009 ஒக்டோபர் 20 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்து கொண்ட பெறுமதி ரூபா 552,310 ஆகும். 2010 மார்ச் 26 ஆந் திகதி வரை இதற்காக ரூபா 475,573 செலுத்தப்பட்டிருந்தது. இக்கட்டிடத்திற்காக நீரினை வழங்குவது தொடர்பாக முறையான திட்டம் தயாரிக்கப்படாமை மற்றும் ஒப்பந்தக்காரர் நிர்மாணத்தினை இடையில் நிறுத்தியமை என்பதன் காரணமாக ரூபா 282,000 தொகையான மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அதன் போது

ரூபா 235,693 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 552,310 தொகையுடன் பூர்த்திசெய்யப்படவிருந்த வேலைக்காக மேலதிகமாக ரூபா 158,956 செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் முன்னைய ஒப்பந்தக்காரரின் செயலாற்றல் பிணை முறிக் காலத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக உடன்படிக்கை மீறப்பட்டதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு 2012 மே 23 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குருவிட்ட குருகங்க ஊடாக படதொட பாலத்தினை நிர்மாணிக்கும் வேலைக்காக 2011 பெப்ரவரி 10 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் ரூபா 9,139,119 பெறுமதியான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தும் வேலை தொடர்பான அனைத்து ஆபத்துக்களையும் உள்ளடக்கும் காப்புறுதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் வேலையின் கால எல்லையை உள்ளடக்கும் வகையில் செயலாற்றல் பிணையைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2010 செப்தெம்பர் 15 ஆந் திகதி வேலையினைப் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த இவ் வேலை கணக்காய்வுத் திகதியான 2011 நவம்பர் 24 ஆந் திகதி அளவில் வேலையை ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் கடந்திருந்தும் செயல் முன்னேற்றம் 55% அளவில் காணப்பட்டதுடன் அதற்காக 2010 திசெம்பர் 06 ஆந் திகதி வரை ரூபா 5,507,729 செலுத்தப்பட்டிருந்தும் வலது பக்க மற்றும் இடது பக்க தாங்கல் சுவரை கற்பாறையுடன் தொடர்புபடுத்துவதற்கு “ டவல்ஸ்” பிடிக்காமை, பிரதான தூண்களின் அடியில் கொங்கிறீட் இடும் போது கொங்கிறீட் கலவைகளுக்கு இடையே 6”x 9” சல்லிக் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை ஆகிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த வகையில் தட்டுக்கள் தயாரிக்கப்படாததன் காரணமாக மூன்றாவது தூண் வெளிப்பக்கம் பூச்சு திருப்தியான நிலையில் இல்லாததுடன் நடுப்பக்கம் ஒட்டப்பட்டு நேர் இல்லாத தன்மையினைக் கொண்டிருந்தமை அவானிக்கப்பட்டது.

(ஈ) மாபலான கடுவாவ வீதியில் எல்ல ஓயா பாலத்தின் 14 மீற்றர் நீளத்திலும் 4.8 மீற்றர் அகலத்தில் நிர்மாணிக்கும் வேலையின் மேலதிக வேலையினைப் பூர்த்திசெய்வதற்காக 2010 திசெம்பர் 24 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் ரூபா 4,610,040 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை அனைத்து

ஆபத்துக்களையும் உள்ளடக்குவதற்கான காப்புறுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாததுடன் நிர்மாண வேலை ஒரு ஆண்டு அளவில் தாமதமடைந்திருந்தது. மேலும் வீதி ஓரங்களை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் கலவையில் வெடிப்புக்களும் குழிகளும் அவதானிக்கப்பட்டதுடன் பாலத்தின் ‘‘ஓரக்கல்’’ இற்கும் பக்கப் பலகைக்குமிடையே பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் கலவைப் பூச்சு மிகவும் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டமை 2011 திசெம்பர் 02 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) பலவின்ன பின்தகந்த வீதியினை மேற்பார்வை செய்யும் வேலை 2011 நவம்பர் 03 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வீதியினை மேம்படுத்துதல் செய்யப்பட்டு நான்கு மாதங்கள் கடப்பதற்கு முன்னர் வீதி முழுவதும் பள்ளங்கள் பரவிக் காணப்பட்டதுடன் இருபக்க வடிகால் குறித்த ஆழத்தில் செய்யப்படாததன் காரணமாக மண் நிரம்பி தண்ணீர் ஓடுவது தடைப்பட்டிருந்தது. மேலும் இரண்டு பக்கத்திலுள்ள உயர்ந்த இடங்கள் வெட்டி அகற்றப்படாதிருந்தது. மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டு செலவு செய்யப்படாமையினால் ரூபா 1,483,180 செலவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டிருந்த இவ் வேலையின் விளைதிறன் வீழ்ச்சியுற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) இரத்தினபுரி மாவட்டத்தில் ரூபா 17,277,497 கூட்டு மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியிலான 10 வீதி நிர்மாணிப்புக்கள் மற்றும் மேம்படுத்தல் வேலைகளுக்காக மீளாய்வாண்டின் மற்றும் மேம்படுத்தல் வேலைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 12,976,400 கூட்டுமொத்த தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தும் அவ் வேலைகளின் பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதனால் இந்த வீதிகள் நிலைத்திருப்பது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்ததுடன் 06 வேலைகளுக்கான ஒப்பந்தங்களை வழங்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்தக் காரர்களினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய காப்புறுதிச் சான்றிதழ்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

I. குறித்த நியமங்களைக் கொண்ட கல், மணல், சீமெந்து பயன்படுத்தப்படாமை

II. ¾'' கல்லுக்குப் பதிலாக ½'' கல் பயன்படுத்துதல்

III. வீதியின் மேற்பக்கம் சமமாக மட்டப்படுத்தப்படாமை

IV. குறிப்பிடப்பட்ட அளவில் தார் இடப்படாமை

V. மேற்கூறிய காரணத்தினால் மிகவும் குறைந்த காலத்தில் வீதியின் பல இடங்களில் பள்ளங்களும் குழிகளும் காணப்படுதல்

**2.16 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மாகாண சபையின் மொத்த செலவுத் தலைப்புக்களின் எண்ணிக்கையில் 41% மீளாய்வாண்டின் போது கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராததுடன் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 60 நிறுவனங்கள் தொடர்பாக ஆண்டின் போது எதுவித கணக்காய்வும் மேற்கொள்ளப்படாததனால் திட்டம் முறைப்படியாக அமுல்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக மாகாண சபையின் நிறுவன தலைவருக்கும் பிரதம செயலாளருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடும் நிதிசார் கட்டுப்பாடும்

(ஆ) சொத்துக்கள் மற்றும் மனித வளங்கள்

(இ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

(ஊ) தகவல் முகாமைத்துவம்

(எ) பாடசாலை முகாமைத்துவம்